DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.17 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : அபிராமி |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.04.2025.

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.17 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

12, 13, 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் எடப்பாடியில் வசிக்கிறேன். மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தராக உள்ள சின்னராஜ் என்பவரிடம் தட்டச்சராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த 24.11.2009 ல் இதே பத்திர எழுத்தர் அலுவலகத்தில்

தட்டச்சராக பணிபுரிந்த போது கச்சுப்பள்ளியை சேர்ந்த முருகேசன் மற்றும் அவரது குடும்பத்தார் கிரைய ஆவணம் எழுதுவதற்காக எங்கள் அலுவலகம் வந்திருந்தார்கள். அந்த கிரைய ஆவணத்தை சின்னராஜ் எழுதி கொடுக்க நான் தட்டச்சு செய்து கொடுத்தேன். மேற்படி சொத்தை மணி என்பவர் கிரையம் வாங்கினார். பின்பு அந்த சொத்தை அதே தினத்தில் பச்சமுத்து, வைத்தி, அருணாசலம், பரமசிவம் ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்தார். அந்த ஆவணத்தையும் நான் தான் தட்டச்சு செய்து கொடுத்தேன். பின்பு 21.12.2009 ம் தேதி சடையன், முருகேசன் ஆகியோர் குடும்பத்தினர் பரமசிவம், வைத்தி ஆகியோருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று வந்தார்கள். அந்த ஆவணத்தையும் சின்னராஜ் எழுதி கொடுக்க நான் தட்டச்சு செய்து கொடுத்தேன். அந்த ஆவணங்கள் அ.சா.ஆ.2 வரிசை தான். அவற்றில் என்னுடைய கையொப்பம் உள்ளது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தையும் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய நான் உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் தட்டச்சு மட்டும் தான் செய்து கொடுத்தேன். மேற்படி ஆவணங்களை தட்டச்சு செய்யும் போது இரு தரப்பினர்களும் உடனிருந்தார்கள் என்றால் நான் எழுதி கொடுத்ததை தான் வாங்கி தட்டச்சு செய்து கொடுத்தேன். நான் அப்போது தான் புதியதாக வேலைக்கு சேர்ந்திருந்ததால் தரப்பினர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(மற்ற எதிரிகள் அனைவரும் 1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள். )

Sd/-அபிராமி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.